ஓம் ஈஸ்வரா குருதேவா
ஓம் ஈஸ்வரபட்டாய சற்குருதேவா நமஹ


ஓம் தாயே நமஹ
ஓம் திரிதேவியே நமஹ

ஓம் தந்தையே நமஹ
ஓம் குருவே நமஹ

# சப்தரிஷி யாக பெருவேள்வி விழா

## அழைப்பிதழ்





## ஓம் ஸ்ரீ திரிதேவி அம்மன்

## விஜயலட்சுமி அம்மாள் ஆசிரம அறக்கட்டளை

## மேட்டுப்பாளையம்.

அன்புடையீர்,

நிகழும் துன்முகி வருடம் உத்தராயணம் வஸந்து ருது சித்திரை மாதம் 8, 9 ஆம் தேதிகளில் 20-4-2016 புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு குரு ஓரையில் கன்னி லக்கினத்தில் சதுர்த்தசி திதியில் ஹஸ்த நட்சத்திரத்தில் **சக்தி அழைப்பு** நடைபெறுகிறது. 21-4-2016 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு புதன் ஓரையில் கன்னி லக்கினத்தில் பௌர்ணமி திதியும் சித்திரை நட்சத்திரமும் கூடிய சுப வேளையில் **சப்தரிஷி யாக பூஜை** நடைபெறுகிறது. அது சமயம் அனைத்து ஆத்ம ஐக்கிய அன்பர்களும் தவறாது கலந்து கொண்டு மகரிஷிகளின் ஆசிர்வாதம் பெற்று தங்கள் வாழ்விலும் ஆன்மாவிலும் வளர்ச்சியை ஏற்படுத்தி கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்.

இப்படிக்கு:
**விழா குழுவினர்**

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 20-4-2016 புதன்கிழமை<br>மாலை 4.30 மணிக்கு | சக்தி அழைப்பு |
| 21-4-2016 வியாழக்கிழமை<br>மாலை 5.00 மணிக்கு | சப்தரிஷி யாக பூஜை |
| 22-4-2016 வெள்ளிக்கிழமை: | சூரிய தியானம், ஸ்ரீ மகாலட்சுமி பூஜை, திருவிளக்கு பூஜை, அன்னாபிஷேகம், ஸ்ரீ திரிதேவி அம்மன் பூஜை, தேனிலை பஜனை மற்றும் சாதுக்களின் அருளாசிகளும் |

### *விழா நடைபெறும் இடம்:*

ஊட்டி ரோட்டில் வாசன் தியேட்டருக்கு அருகில் மேற்கே செல்லும் சாலையில் ரெயில்வே கிராஸிங் கடந்து வண்ணான் படுகையில் அமைந்துள்ள **ஸ்ரீ திரிதேவி அம்மன் கோவில்**



**கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், மற்றும் அனைத்து ஹோமங்களும் சிறப்பாக நடத்தி கொடுக்கப்படும்.**

குறிப்பு:

கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து பொருள் உதவியும், நிதியுதவியும், கர சேவையும் செய்த அனைத்து ஆத்மாக்களுக்கும் இருகரம் கூப்பி நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு ஸ்ரீ திரிதேவி அம்மனின் அருட்கடாட்சம் அனைவரும் பெற வேண்டிக் கொள்கிறோம். இந்த வருடமும் தங்களால் இயன்ற அளவு தாராளமாக பொருள் உதவி செய்து விழாவினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உத்திராயன கால கட்டத்தில் நடக்க கூடிய ஹோமம் சப்தரிஷி ஹோமம். தட்சிணாயன கால கட்டத்தில் நடக்கும் ஹோமம் துருவரிஷி ஹோமம். சூரியன் வடக்கு நோக்கி நகருகின்ற காலம் உத்திராயனம். சூரியன் தெற்கு நோக்கி நகருகின்ற காலம் தட்சிணாயனம்.

சப்தரிஷிகள் ஏழு பேர். பிருகு, கிருது, புலகர், புலஸ்தியர், அங்கிரவரசு, அத்திரி, வசிஷ்டர் அருந்ததி . இது வடக்கு திசையில் இருக்க கூடிய திசைமாறா நட்சத்திர கூட்டம். இது துருவ மண்டலத்தை மையமாக கொண்டு சுற்றி கொண்டிருக்க கூடியது. இந்த சப்தரிஷி மண்டலத்தை சுற்றி அண்ட வெளியில் 2000 சூரிய குடும்பங்கள் சுழன்று ஓடி கொண்டு இருக்கின்றது. இதில் நம் சூரிய குடும்பத்தில் ஒன்பது நவ கோள்களும் 27 நட்சத்திர மண்டல கூட்டமும் சுழன்றுகொண்டு இருக்கின்றது. இந்த சப்தரிஷி மண்டலத்தில் இருந்து வரக்கூடிய ஒளி கதிர்களே (VIBGYOR) வானவில் என்று சொல்ல கூடிய ஏழு வண்ணகதிர்கள். இந்த ஏழு வண்ணகதிர்களையும் சூரியன் பெற்று தன் சமைப்பாக்கி எட்டாம் சமைப்பை நுண் மின் காந்த ஆற்றலாக தருகின்றார்.

நம் உயிர் இயக்கத்திற்கு, இச் ஜீவ மண்டல இயக்கத்திற்கு தேவையான ஆற்றலை தருவதே இச்சூரிய மண்டலத்தினுடைய நுண் மின்காந்த ஆற்றல். அதேபோல் சந்திர மண்டலத்தினிடம் இருந்து குளிர்ச்சியான ஜீவ காந்த சக்தியும் மதிகாந்த ஆற்றலும் கிடைக்கின்றது. இவ்விரண்டும் சேர்ந்தே உடலும், உயிரும், மதியும் ஆகின்றது. இந்த நுண் மின் காந்த ஆற்றலின் பெருக்கமே உயிர் ஆற்றலின் வளர்ச்சி. இச் சரீர மண்டலத்தில் உள்ள ஜீவ காந்த சக்தி ஒவ்வொறு ஜீவ ராசிகளும் உயிர் நுண் மின் காந்த சக்தியின் தொடர் கொண்டு இயங்கிக் கொண்டு இருக்கின்றது.

இது மனிதனுக்குள் எண்ணமாகவும், உணர்வாகவும், உணர்வுகள் இயங்குவதற்கு பெரிதும் உதவுகின்றது. சூரியனின் ஒளி சக்தியை உணர்வு கொண்டு நாம் ஈர்த்திடும் நிலையில் நம் சரீர மண்டலத்தின் நாதமுடன் அச்சூரிய மண்டலத்தின் ஒலி, ஒளி நாதம் கலந்து நம் ஆன்மாவிற்கு வலு ஊட்டுகின்றது. உணர்வின் எண்ணத்தை கொண்டு நாம் சுவாசிக்கும் உணர்வானது நம் சுவாச மண்டலம் உள் இழுத்து இழுக்கப்பட்ட அந்த சுவாசம் சரீரத்தில் உள்ள ரத்த மண்டலத்தில் 24 மணி நேரத்தில் கலந்து நாடி நரம்பின் வழியாக ஊனுக்குள் ஊடுருவி நம் எலும்புக்குள் செல்ல 48 நாட்கள் ஆகின்றது.

பால்வெளியில் கலந்துள்ள பலவிதமான அமில சக்தியின் ஆற்றலும் நம் சரீர மண்டலத்தால் ஈர்க்கப்பட்டு நம் ஆன்மாவிற்கு வலு கிடைக்கின்றது. ஏகாந்தம் என்பது எண்ணமற்று இருப்பது மட்டும் அல்ல. சூன்யத்தில் ஒன்றிவிடுவதும் அல்ல, அண்ட வெளியாய் ஒன்று மற்றதாய் பேரண்டங்கள் முழுவதையும் இயக்கும் அவ்வெளியின் உணர்வாய் இருக்கும் சதாசிவத்தை சிவ சாயுஜ்யத்தை உள் வெளிக்குள்ளும் உள்ள வெளிக்குள்ளும் நிலை நிறுத்தலே, உணர்தலே ஏகாந்த தியானம்.

சொற் தொடராலும் உரைக்கோ, கவிதைக்கோ, ஒலி நாதத்திற்கோ, புற வெளி நாதத்திற்கோ முன்னிலை தேவையில்லை. முன்னிலையும், படர்க்கையும் அற்று தன்னில் தானாய் நிற்பதே யோகம், தியானம், ஜெபம், சாதனை. மற்றவர்கள் முன் தன் சாதனையை காட்டிகொள்ள (Expose) அவசியம் இல்லை. தபசி ஆனாலும் சரி, பக்தனானாலும் சரி, சாதகனானாலும் சரி. அடையாளபட்டு வாழ்வது உலக வாழ்க்கை. அடையாளம் அற்று வாழ்வது சூட்சும வாழ்க்கை.

அரூபத்தை நிரூபணம் பண்ண அவசியம் இல்லை. அதுவே அதை நிரூபித்து கொள்ளும். அரூபம் இல்லாமல் ரூபம் இல்லை. சாதனை என்பது வாத விவாதத்திற்கு உட்பட்டது அல்ல. அது ஜீவன் தானே உணர்ந்து கொள்ள வேண்டியது. பகவானை தொழுவதால் பகவானை சரணடைந்து விட்டேன் என்ற எண்ணம் வேண்டாம். முப்பது வருடம் பாடம் கேட்டாலும் சத்சங்கத்தில் கலந்தாலும் அவனுக்குள் எந்த மாற்றமும் இல்லை. கடல் நீரில் போட்ட கல்லை போல் பாறையாக இருப்பான். நீரில் கரைந்த உப்பை போல் மெய் சாதகன் பொய் விடுத்து மெய் வழிதனில் பிரவேசிப்பான்.

ஒரு வருடத்திற்கு 365 நாட்கள். அதில் 13 பௌர்ணமி. அது அல்லாமல் ஆடி 18, சபரிமலை யாத்திரை, குருஜெயந்தி, மாத்ரு பூஜா என மொத்தம் 20 நாட்கள் பூஜை வருவது அரிது. சில பூஜைகளுக்கு இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்து பணிகள் செய்கிறோம். நாம் செய்யும் பணியின் அளவோ எறும்பு அளவுதான். ஆனால் பணியின் சுமையை எண்ணி புலம்புவதோ மலை அளவு. செயல்படும் சக்தி உடையவரும் இந்த புலம்பலில், பிதற்றலில், செயலற்றவர்களாகிவிடுவர். இதுவே நாம் செய்யும் ஜெபம். இதுவே நமது ஆசிரம பணி. பதினைந்து, இருபது வருடம் வந்தாலும் பகவானை நினைத்து பாடல் பாட, மந்திரம் ஜெபிக்க இயலாதவர்கள் நாம். நமக்குள் எந்த மாற்றமும் நிகழாது அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் பகவானுடைய ஆசீர்வாதம் நமக்கு வேண்டும். ஆனால் அதற்கு நாம் முயற்சிப்பதும் இல்லை.

நல்ல உணர்வு கொண்டு நாம் செய்யும் பிரார்த்தனைகள் பகவானின் ஆசீர்வாதத்திற்கு உட்பட்டது. ஆனால் மனிதனின் இயற்கை சுபாவமான வளர வேண்டும் என்ற உணர்வை காருண்யத்தோடும் சத்வ குணத்தோடும் நல் ஒழுக்க பண்புகளோடும் மேம்படுத்திக் கொள்ள வேண்டியது முக்கியமானது. மற்றவன் அமைதியாக இருக்கின்றான் என்பதால் நாம் பொறாமை கொள்வதால் எந்த பயனும் இல்லை. பிறரின் அமைதியை கெடுப்பதால் உனக்கு சிறிது சந்தோஷம் கிடைக்கலாம். அது நிலையானது இல்லை. மற்றவர்களை பார்த்து பொறாமை கொள்பவன் தன் வாழ்க்கையை இழந்தவன் ஆகின்றான். தன் வம்சத்தை அழித்தவன் ஆகின்றான்.

ஞானியரும், துறவியரும், நாயன்மார்களும் இறைவன் அருளை பெற்றவர் மட்டும் அல்ல. சான்றோர் பெருமக்களாகவும் திகழ்ந்தார்கள். சான்றோர் பெருமக்கள் எவ்வுயிரையும் மதிக்க கற்று கொண்டவர்கள் தலைகனம் கொண்டவர்கள் அல்ல. எவ்வுயிரையும் இம்சிக்காமல் மற்றவரின் உணர்வுகளை புன்படுத்தாதவர்கள் தியாகம் செய்த தவசீலர்கள். மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டியவர்கள் தவசீலர்கள். அதனால் தான் அவர்கள் வாழ்க்கையை காவியம் ஆக்கினார்கள். ஒருவன் வாழும் வாழ்க்கை எப்படி வேண்டுமானாலும் வாழ்வதல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையரைக்குள் வாழ வேண்டியதே தவ வாழ்க்கை.

வாழும் வாழ்க்கையின் தூய்மையே அவனுக்கு சான்றை தருகின்றது. இயற்கையே அவனது செயலால் மகிழ்ச்சி கொண்டு பூரித்து அவனை உயர்த்தி காட்டும். மனிதனுக்கு மனிதன் கொடுத்து கொள்ளும் பட்டம் அல்ல, பதவி அல்ல உயர்வு நிலை. அவன் ஆற்றும் தொண்டே, பணியின் உயர்வே, செயல்பாட்டின் வெளிப்பாடே ஒருவன் கீர்த்தியை உயர்த்தும். அதுவே இறைவன் நமக்கு கொடுக்கும் பரிசு. பரிசுக்காக பாடுபடும் அவசியம் இல்லை. இறைவனிடம் சமர்பித்து கொண்டவனிடம் சமர்பித்தலை தவிர வேறு எதுவும் அவனுக்கு பிரதானம் ஆகாது.

கொள்ளூர் மூகாம்பிகை கோவிலில் சுமார் 90 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். சிறு வயதிலேயே தன் குடும்பத்தை, கணவனை இழந்த அந்த பெண் தன் வாழ்நாள் முழுவதும் அந்த கோவிலில் பணி செய்வதற்காகவே அர்ப்பணித்து கொண்டார். கோவில் கருவறை சுற்றி உள்ள பிரகாரங்களிலிருந்து சுற்றி உள்ள மண்டபங்களை வழித்து கோலமிட்டு அக்கோவிலில் உள்ள பூஜா பாத்திரம் அனைத்தையும் அனுதினமும் தவறாது கழுவி தூய்மையாக்கி தருவது, சில மலர்களை கொய்து மாலை கட்டி தருவது போன்ற செயல்கள் மூதாட்டியின் பணி. குனிந்து குனிந்து பணிகள் செய்ததால் முதுகு தண்டு வளைந்து முகம் முழங்காலுக்கு கீழேயே இருக்கும் அளவுக்கு ஆயிற்று. அந்த கோவிலில் பூஜிக்கும் பட்டர் தரும் நெய்வேத்தியமே அவருக்கு தரும் ஆகாரம். அவரை அஜ்ஜி பாட்டி என்றும் அழைப்பார்கள்.

கருவறைக்குள் இருக்கும் சர்வ சொரூபிணியான மூகாம்பிகை அன்னையின் கருணைக்கு பாத்திரம் ஆனவர் அந்த மூதாட்டி. எந்த ஒரு ஆடம்பரமும் இல்லாமல் எளிமையான கோலத்தில் இருந்த அந்த பாட்டியை அயல் நாட்டவரும் தேடி தொழுதார்கள். எந்த ஒரு எதிர்பார்ப்பும் எந்த ஒரு எண்ண குழப்பமும் இல்லாமல் தன் பணியில் அந்த தாய் பூரணமாக செயல்பட்டாள். அவர்களை போன்ற ஆத்மாக்களின் ஆசியை என்றும் வேண்டி வணங்குகிறோம்.

உடல் தளர்ந்து உள்ளம் அம்பாளின் பாதத்தில் சரணடைந்து நட்செயல்கள் புரிந்து அந்த தாய்க்கு இந்த உலகத்தில் யாரும் சான்றளிக்க அவசியம் இல்லை. அன்னை கோலாபுரேஸ்வரியின் ஆசியே நற்சான்று. நாம் செய்ய கூடிய செயல்களை செயல்பட வேண்டிய நற்கர்மங்கள், உலக வாழ்க்கையில் பந்தபாசங்களை கடந்து செயல் அற்ற நிலையில் செயல் கொள்வோனே தன் ஆத்மாவின் உயர்வுக்கு வழி தேடியவன்.

நம்முடைய கர்மத்தில் செயல், சுமை, ஆசைகள், பற்று, பாசங்களுக்கு உட்பட்டு தான் நாம் வாழ்கின்றோம். நம்முடைய ஆணிவேரை சுற்றி நிறைய சல்லிவேர்கள். சிறுவிதை பெரும் விருட்சத்தை காட்டாது. ஆனால் பெரும் விருட்சம் சிறு வித்துக்குள் அடக்கம். வித்தின் வளர்ச்சியே விருட்சம். மாமரம் மாமரம்தான், அரசமரம் அரசமரம்தான், கல்லிமரம் கல்லிமரம் தான். டில்லி மரம் டில்லி மரம்தான். ஒவ்வொரு ஜீவாத்மாவும் மிக உயர்ந்த தத்துவங்களை, வாத விவாதங்களை உயர்ந்த மகான்களால் எழுதப்பட்ட, கண்டு உணரப்பட்ட பாடங்களை, பாடல்களை வரிக்கு வரி மனப்பாடம் செய்ததால், நாம் அவர்கள் பெற்ற அனுபவத்தை பெற்றவர்கள் ஆகிவிட முடியாது.

நம்முடைய செயலின் விளைவே நம் உயிர் ஆத்மாவின் நிலை. இதில் எந்த மாற்றமும் இல்லவே இல்லை. நீ தேடியது பொருளையா, அருளையா, பொருளாள் அருளையா, புறத்தால் அருளையா, உன் சுயத்தையா, இறைவனது திருவடியையா, நிருத்தத்தையா, அரூபத்தையா, ரூபத்தையா? பாய்ந்தோடும் உன் சக்தியின் விஸ்தரிப்பே படைப்பே உன்னை சுற்றிலும் உருவாகிறது.

உனக்குள் மறைந்திருக்கும் ஆசை, இச்சை, தேடல், எழுச்சி, கிளர்ச்சி, மோகம், நீ அனைத்தையும் எந்த வஸ்திரம் கொண்டு திரையிட்டு மூடினாலும் உன் உள்ளத்தில் புரிதலால் பிறக்கும் செயல்கள் அதுவே உன் ஒளியாய் அதுவே உன் வாழ்க்கையின் வழிகாட்டியாய் அஞ்ஞானத்தின் இருப்பிடமாய், மதுவின் மயக்கமாய் தன்னை தானே ஏமாற்றி படுகுழியில் தள்ளிவிடும். தன்னையே தான் தெளிவித்து கொள்ளுதல் அவசியம்.

அனைத்து மயக்கங்களிலிருந்தும் தன்னை விடுவித்து கொள்ளுதல் மிக முக்கியம். கண்ணொளியும், புலன் ஒளியும் உள்ளவனுக்கு உள் ஒளி ஏதடா, உள் ஒளி பெற்றவனுக்கு புற ஒளி ஏதடா. அது இதுவாகி இது அதுவாகி என்னும் நிலை உள்ஒளி கொண்டவனே தன் ஒளி பெற்றவன் ஆகின்றான். தன் ஒளியில் நிற்பவனே மெய்யொளி பெறுகின்றான். மெய்யொளி பெற்றவனே உயர் ஒளியும் ஞான ஒளியும் அடைகின்றான்.

சீர் கொண்ட செயலின் செயல்பாட்டில் உயர் ஒளி பெறுவோமே. இதை விடுத்தோனே அதுவாகி நிற்பான். இதை சுமப்பவனுள்ளும் அது இருக்கும். அது இல்லாத இடம் இல்லை. இச்சையின் ஒடுக்கம் ஆற்றலின் பெருக்கம். ஈசனில் ஒடுக்கம் உயர்ந்த வித்தின் படைப்பாகும். தேகத்தின் மீது கொண்ட பற்றால் உண்டாகும் வாழ்க்கையை காட்டிலும் மனதை புரிந்து வாழும் வாழ்க்கை சிறந்தது. தேகம், மனம், எண்ணம், உணர்வு இவற்றை காட்டிலும் உயர்ந்தது இயல்பு. சுயத்தின் இயல்பை புரிந்து வாழும் வாழ்க்கை. தாமரை புஷ்பத்தை போன்ற உயர்ந்த ஆத்மார்த்த வாழ்க்கை ஆகும்.

தூய்மையான உள்ளம், தூய்மையான அகம், தூய்மையான சிந்தனை, தூய்மையான செயல் இவை அனைத்தும் பதிவிரதா சக்தி ஆகின்றது. இப் பதிவிரதா சக்தியே ரிஷிசக்தி ஆகின்றது. எச்சத்தில் ஜனித்த இந்த யாக்கையை இது எச்சம் என்று உணர்ந்தால் துக்கங்கள் நீங்கிவிடும்.